

அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை, அவரது இல்லத்தில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் இருந்து விலகிய, ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகரச் செயலாளர் சுரேஷ் தலைமையில் 200 பேர் நேரில் சந்தித்து தங்களைக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக்கொண்டனர். ராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஏ.முனியசாமி, கழக ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் என்.சதன் பிரபாகர் எம்.எல்.ஏ., மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் கே. செந்தில்குமார், கீழக்கரை நகர ஜெயலலிதா பேரவைச் செயலாளர் வி.வி. சரவணபாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.



அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை, அவரது இல்லத்தில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் இருந்து விலகிய, ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேரூராட்சி செயலாளர் காட்டுராஜா மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றிய 13வது வார்டு உறுப்பினர் ஆர். கோதண்டம், 15வது வார்டு உறுப்பினர் எம். அர்ஜூனன், போகலூர் ஊராட்சி ஒன்றிய 1வது வார்டு உறுப்பினர் வி. காளீஸ்வரி மற்றும் அவரது கணவர் விஜயகுமார் உள்ளிட்ட 100 பேர் நேரில் சந்தித்து தங்களைக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக்கொண்டனர். ராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஏ.முனியசாமி, கழக ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் என். சதன் பிரபாகர் எம்.எல்.ஏ., கழக எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் எஸ்.எம். சாமிநாதன், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் என்.எம்.ஆர்.சத்தியேந்திரன், முதுகுளத்தூர் பேரூராட்சிச் செயலாளர் எஸ்.ஆர்.ஷங்கரபாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

# சென்னையில் 8–ந்தேதி 10 ஆயிரம் கலைஞர்கள் பங்கேற்கும் கின்னஸ் சாதனை பரதநாட்டிய நிகழ்ச்சி: தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் ஏற்பாடு

சென்னை, பிப். 5–

சென்னையில் 8–ந்தேதி 10 ஆயிரம் கலைஞர்கள் பங்கேற்கும் கின்னஸ் சாதனை பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு சுற்றுலா வளர்ச்சி கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் 2014–ம் ஆண்டு முதல் 2018–ம் ஆண்டு வரை தொடர்ந்து 5 ஆண்டுகளாக நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்வதற்கும் அவர்களின் தங்கும் நாட்களை நீட்டிப்பதற்கும் விழாக்கள் உறுதுணையாக உள்ளன. நமது கலை மற்றும் பண்பாட்டை காணவரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே, தமிழ்நாட்டுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

1955–ம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து 2000–ம் ஆண்டு வரை கின்னஸ் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் என அழைக்கப்பட்ட போதிலும், கின்னஸ் புக் ஆப் வேர்ல்டு என்ற புத்தகத்தை ஒவ்வொரு ஆண்டும் மனித சமுகத்தின் சாதனைகளையும் உலக இயற்கையின் உச்சகட்டங்களையும் வரிசைப்படுத்தி அமெரிக்க ஐக்கிய நாடுகள் வெளியிட்டு வருகிறது.

சுற்றுலாத் துறை 10 ஆயிரம் பரதநாட்டிய கலைஞர்களைக் கொண்டு வரும் 8–ந் தேதி மாலை 4.30 மணியளவில் சென்னை கௌரிவாக்கத்தில் உள்ள எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் கின்னஸ் உலக சாதனை நிகழ்ச்சியாக 'சதிர் 10,000' என்ற சிறந்ததொரு நிகழ்ச்சியை நடத்த சுற்றுலாத்துறை திட்டமிட்டுள்ளது.

கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் நடன பள்ளிகளில் உள்ள பரநாட்டிய மாணவர்களை இந்த புகழ்வாய்ந்த நிகழ்ச்சியில் பெருமளவில் கலந்து கொண்டு, இந்நிகழ்ச்சி மாபொரும் வெற்றியடைய சுற்றுலாத்துறை அன்புடன் அழைக்கிறது. பங்கு கொண்டவர்களுக்கு சுற்றுலாத்துறை சான்றிதழ் வழங்கும்.

இதில் இலவசமாக பதிவேற்றம் செய்ய http://sadhanaisigaram.com/ibd/register இணையதளத்தை பார்வையிடலாம். மேலும் தகவலுக்கு ரஹிமான் என்பவரை தொடர்பு கொள்ளலாம். (கைபேசி எண் 99947 97110)



# மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப்போட்டி: கடலூர் கலெக்டர் அன்புச்செல்வன் துவக்கினார்

கடலூர், பிப்.5–

கடலூர் அண்ணா விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளை கலெக்டர் அன்புச்செல்வன் துவக்கி வைத்தார்.

இந்த மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகள் போட்டிகள் தடகள மற்றும் குழுப்போட்டிகள் கைகால் ஊனமுற்றோர்கள், பார்வையற்றோர்கள், மனவளர்ச்சி பாதிக்கப்பட்டவர்கள், செவித்திறன் குறையுடையவர்கள் என ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக நடத்தப்பட்டன. இப்போட்டியில் கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் உள்ள 34 மாற்றுத்திறனாளிகள் பள்ளிகளைச் சேர்ந்த, மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் மொத்தம் 400 பேர் கலந்து கொண்டனர்.

இந்த மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகளில் முதல் 3 இடங்களை பெற்றவர்களுக்கு, பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களும், குழுப்போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாவட்ட அளவுப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள், மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெறுவார்கள் என கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் பா.சிவா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமுருக தட்சணாமூர்த்தி, மாற்றுத்திறனாளி பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், நடுவர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பயிற்றுனர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.


**பிவிபி வென்சர்ஸ் லிமிடெட்**
(CIN: L72300TN1991PLC020122)
பதிவு அலுவலகம்: கேஆர்எம் சென்டர், 9வது தளம், கதவு எண். 2, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031, தமிழ்நாடு
போன் : 044 30285570
கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண். 83 & 84, 4வது தளம், புன்னையா பிளாசா, ரோடு எண். 2, பஞ்சாரா ஹில்ஸ், ஐதராபாத்–500 034. தெலுங்கானா. போன் : 040 67309999,
இ–மெயில்:investorrelations@pvpglobal.com Website:www.pvpglobal.com

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, விதி 29–ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே, டிசம்பர் 31, 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, பிப்ரவரி 12, 2020 அன்று சென்னையில் உள்ள கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பிவிபி வென்சர்ஸ் லிமிடெட்டுக்காக
தேதி : பிப்ரவரி 04, 2020 — ஒப்பம்/– பிரசாத் V. பொட்லூரி
இடம்: ஐதராபாத் — சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்



**பிக்சர்ஹவுஸ் மீடியா லிமிடெட்**
(CIN: L92191TN2000PLC44077)
பதிவு அலுவலகம்: கேஆர்எம் சென்டர், 9வது தளம், கதவு எண். 2, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031, தமிழ்நாடு
போன் : 044 30285570
கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண். 83 & 84, 4வது தளம், புன்னையா பிளாசா, ரோடு எண். 2, பஞ்சாரா ஹில்ஸ், ஐதராபாத்–500 034. தெலுங்கானா. போன் : 040 67309999,
இ–மெயில் : ir.telephoto@pvpglobal.com Website: www.pvpcinema.com

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, விதி 29–ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே, டிசம்பர் 31, 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, பிப்ரவரி 12, 2020 அன்று சென்னையில் உள்ள கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பிக்சர்ஹவுஸ் மீடியா லிமிடெட்டுக்காக
தேதி : பிப்ரவரி 04, 2020 — ஒப்பம்/– பிரசாத் V. பொட்லூரி
இடம்: ஐதராபாத் — நிர்வாக இயக்குனர்



ESSAR
**எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018, தமிழ்நாடு, இந்தியா.
Tel.: +91 44 2499 5340 Fax: 91 44 2535 1272
CIN: L65990TN2005PLC071791
Email id: eslinvestors@essar.com • Website: www.essar.com

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இதர அலுவல்களுக்கு இடையே, 31 டிசம்பர், 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வியாழக்கிழமை, பிப்ரவரி 13, 2020 அன்று எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே. மார்க், மகாலட்சுமி, மும்பை–400 034, மகாராஷ்டிராவில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.essar.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்டுக்காக
தேதி: பிப்ரவரி 4, 2020 — ஒப்பம்/– லட்சுமி ஜோஷி
இடம்: மும்பை — கம்பெனி செயலாளர்


## குடியுரிமைசட்டத்தால்முஸ்லீம்களுக்குபாதிப்பில்லை

# எந்த சட்டவிரோத தொழிலும் செய்யவில்லை: ரஜினிகாந்த் பேட்டி

சென்னை,பிப்.5–

நேர்மையாக வரி செலுத்துவதாகவும், எந்த சட்டவிரோத தொழிலும் செய்யவில்லை என்றும் நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018ம் ஆண்டு மே மாதம் 22ந்தேதி நடைபெற்ற பேரணியில் வன்முறை ஏற்பட்டதால் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. இந்த துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். இதுதொடர்பாக அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் செயல்பட்டு வருகிறது.

தூத்துக்குடி போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டதற்கு சமூக விரோதிகளே காரணம் என ரஜினிகாந்த் கருத்து தெரிவித்து இருந்தார். இந்நிலையில் துப்பாக்கி சூடு சம்பவம் குறித்து கருத்து தெரிவித்தது தொடர்பாக 25 ந்தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு ரஜினிகாந்துக்கு அருணா ஜெகதீசன் ஆணையம் சம்மன் அனுப்பியுள்ளதாக நேற்று தகவல் வெளியானது.

இந்நிலையில் இதுதொடர்பாக போயஸ்கார்டனில் உள்ள இல்லத்தில் பேட்டியளித்த ரஜினிகாந்த் கூறியதாவது:–


தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பான விசாரணைக்கு எனக்கு இன்னும் சம்மன் வரவில்லை, சம்மன் வந்தால் ஆஜராகி விளக்கம் அளிப்பேன். திருத்தப்பட்ட குடியுரிமை சட்டத்தால் இஸ்லாமியர்களுக்கு அச்சுறுத்தல் என பீதி கிளப்பப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை, அரசியல் கட்சியினர் சுய லாபத்துக்காக தூண்டி விடுகிறார்கள்.

மாணவர்கள் எதையும் ஆராயாமல் போராட்டம் செய்தால் அரசியல்வாதிகள் தவறாக பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. பிரிவினையின் போது செல்லாமல் இங்கேயே தங்கிவிட்ட இஸ்லாமியர்களுக்கு எந்த அச்சுறுத்தலும் கிடையாது. என்சிஆர் இன்னும் அமல்படுத்தப்படவில்லை; அதுகுறித்து ஆலோசித்துத்தான் வருகின்றனர்.

என்பிஆர் அவசியம் தேவை, மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தினால் தான் யார் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவரும். தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு இரட்டை குடியுரிமை தரப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் வட்டிக்கு பணம் கொடுப்பதாக வெளியான தகவலுக்கு, நான் நேர்மையாக வரி செலுத்துகிறேன், எந்த சட்டவிரோத தொழிலும் செய்யவில்லை என்று ரஜினிகாந்த் தெரிவித்தார்.




சென்னையில் 3 நாட்கள் நடைபெறும் கால்நடை அறிவியல் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கான விலங்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி முகாமை தொடங்கி வைத்த தமிழக அரசின் வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மாநில பேரிடர் மேலாண்மை நிலையான இயக்க நடைமுறை என்ற நூலை நேற்று வெளியிட்டார். உடன் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் முன்னாள் உறுப்பினர் கே. எம்.சிங், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குனர் சிசிலியா ஜோசப் விரிவாக்க கல்வி இயக்குனர் சுதிப் குமார், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை விரிவாக்க கல்வித்துறை தலைவர் டாக்டர் பா.குமாரவேல் உள்ளனர்.


**OSWAL MINERALS LIMITED**
Regd Off: 8/11, Police Station Road, Pallavaram, Chennai – 600 043.
CIN: L30006TN1996PLC035973.
PAN No.: AACCM6499G
Ph: 080-43090000.
E-mail: info@oswalminerals.com

**NOTICE OF THE BOARD MEETING**

Notice is hereby given that pursuant to Regulation 29, read with Regulation 47(1) of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 that a meeting of Board of Directors of the Company is scheduled to be held on **Friday, 14th February, 2020** at its Corporate Office No. 1034, 2nd Floor, 1st Main Road, Dr. Rajkumar Road, 4th Block, Rajajinagar, Bangalore - 560010 at **4.00 p.m.** inter alia to consider and approve the Un-audited Financial Results of the Company for the quarter ended 31st December, 2019.
Further, this notice is available on the website of the Company (www.oswalminerals.com) and Metropolitan Stock Exchange of India Limited (www.msei.in/index.aspx).

For Oswal Minerals Limited
Sd/-
Place: Bengaluru — Milan Maroti
Date: 03.02.2020 — Company Secretary



**போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்**
CIN: U67190MH2007PTC168303
பதிவு அலுவலகம்: தனி கார்ப்பரேட் பார்க், 5–வது தளம், 158, சி.எஸ்.டி. ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (இ), மும்பை–400 098.
Tel: 022-–6741 2314, Fax: 022- 6741 2313 Email: info@phoenixarc.co.in Website: www.phoenixarc.co.in

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

திரு. வெங்கட்ராமன் நாராயணசுவாமி ரதன், சரண்யன் மற்றும் M/s. ஹைடெக் ஏர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டினால், போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண். 4030HL07498321 & 4030HL07499008ன் கீழ் 3.2.2020 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ. 3,43,50,724.93/–(ரூபாய் மூன்று கோடியே நாற்பத்துமூன்று லட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்றுஇருபத்துநான்கு மற்றும் தொன்னூற்று மூன்று பைசா மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய ஒப்பந்த வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 18.12.2019 அன்று சுவாதீனம் செய்யப்பட்டது. அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 12 மார்ச் 2020 பகல் 12 மணி முதல் 01.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறைந்தபட்ச விலை: ரூ.1,96,00,000/– மற்றும் முன்வைப்புத் தொகை ரூ. 19,60,000/–

சொத்தின் விவரம்: விவசாயமல்லாத சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். கதவு எண். 5/4, மனை எண். 3, ப்ளாட் எண். ஏ1, முதல் தளம், ஜெயந்தி பழைய எண். 5 புதிய எண். 4, முதல் குறுக்கு தெரு, பி என் ரோடு, தி.நகர், சென்னை 600 017. எலலைகள்: வடக்கு: முதல் குறுக்கு தெரு பி என் ரோடு டி.எஸ். எண். 8506 கிழக்கு: டிஎஸ் எண். 8510 மேற்கு: மனை எண். 2 டிஎஸ் எண் 8512 தெற்கு: மனை எண். 4 டிஎஸ் எண். 8513.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளம் www.phoenixarc.co.inல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://phoenixarc.co.in/saleauction.php?id=NJA4 and /or on https://phoenixarc.auctiontiger.netல் பார்வையிடலாம்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சென்னை — போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டுக்காக
தேதி: 3.2.2020 — (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் எப்ஒய்18 -1 திட்டம் E-ன் டிரஸ்டியாக செயல்படுகிறார்)


# குடிமக்கள் பதிவேடு பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை: மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, பிப்.5

தேசிய அளவில் குடிமக்கள் பதிவேடு தயாரிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது.

அசாம் மாநிலத்தில், சட்டவிரோதமாக குடியேறியவர்கள் அதிகமாக உள்ளனர். எனவே, அங்கு குடிமக்கள் பதிவேடு தயாரிக்க ஒரு வழக்கில் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. சுப்ரீம் கோர்ட் கண்காணிப்பில் அப்பணி நடந்தது.

கடந்த ஆண்டு ஆகஸ்டு 31ந்தேதி, அசாமில் தேசிய குடிமக்கள் பதிவேட்டின் இறுதி பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் 19 லட்சம் பேரின் பெயர் விடுபட்டிருந்தது. நாடு முழுவதும் இது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதுபோல், நாடு முழுவதும் தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிவித்தார். அதன்மூலம் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று அவர் கூறினார். இதற்கு எதிர்க்கட்சிகள் ஆட்சேபனை தெரிவித்துள்ளன.

குடியுரிமை திருத்த சட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்கள், தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிப்புக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.கடந்த 31ந் தேதி, நாடாளுமன்ற கூட்டு கூட்டத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உரையில், தேசிய குடிமக்கள் பதிவேடு பற்றி எதுவும் இடம்பெறவில்லை.

இந்நிலையில், குடிமக்கள் பதிவேடு குறித்த குழப்பங்களுக்கு மத்திய அரசு நேற்று நாடாளுமன்றத்தில் விளக்கம் அளித்தது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது, மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் கூறியதாவது: தேசிய அளவில் தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிப்பது குறித்து மத்திய அரசு இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.


SHRIRAM Transport Finance Company Limited
A WINNING RELATIONSHIP

**ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**
CIN: L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 3வது தளம், எண்.4,லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி எண்: +91 44 2499 0356 பேக்ஸ்: +91 44 2499 3272. வெப்சைட்: www.stfc.in இமெயில்: secretarial@stfc.in

**டிசம்பர் 31, 2019–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

₹ கோடியில்

| விவரங்கள் | தனியானது | | | | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிந்த காலாண்டு 31.12.2019 | முடிந்த 9 மாதங்கள் 31.12.2019 | முடிந்த காலாண்டு 31.12.2018 | முடிந்த ஆண்டு 31.03.2019 | முடிந்த காலாண்டு 31.12.2019 | முடிந்த 9 மாதங்கள் 31.12.2019 | முடிந்த காலாண்டு 31.12.2018 | முடிந்த ஆண்டு 31.03.2019 |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 4,218 | 12,557 | 3,991 | 15,522 | 4,218 | 12,557 | 3,991 | 15,522 |
| காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 1,186 | 3,095 | 984 | 3,778 | 1,186 | 3,095 | 984 | 3,778 |
| வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 1,186 | 3,095 | 984 | 3,778 | 1,186 | 3,095 | 984 | 3,778 |
| வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 879 | 2,278 | 635 | 2,564 | 879 | 2,278 | 635 | 2,564 |
| வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் (அசோசியேட் லாப பங்கு) | 879 | 2,278 | 635 | 2,564 | 882 | 2,278 | 639 | 2,576 |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 880 | 2,275 | 634 | 2,562 | 883 | 2,284 | 637 | 2,573 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கு முகமதிப்பு ₹10/–) | 227 | 227 | 227 | 227 | 227 | 227 | 227 | 227 |
| இதர சமம் | | | | 15,609 | | | | 15,736 |
| ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன் மற்றும் பின்) (ஒவ்வொன்றும் ₹10/–) அடிப்படை (₹) | 38.75 | 100.43 | 28.02 | 113.01 | 38.88 | 100.84 | 28.15 | 113.52 |
| பலமிழந்தது (₹) | 38.75 | 100.43 | 28.02 | 113.01 | 38.88 | 100.84 | 28.15 | 113.52 |

குறிப்பு:
செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33–ன் கீழ் காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்க விவரம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் www.bseindia.com, www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணைய தளம் www.stfc.in ஆகியவற்றில் உள்ளது.

குழுவின் ஆணைப்படி
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக
உமேஷ் ரேவாங்கர்
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி
DIN : 00141189

இடம்: சென்னை
தேதி : பிப்ரவரி 03, 2020